# வசனப்பகுதிகளை நடைமுறைப்படுத்துதல் பற்றி அக்கறையாக இருக்க வேண்டியது ஏன்?

இந்தப் படிப்பு அவசியமானதாக இருப்பது ஏன்? நமது வாழ்வில் வேதாகமத்தின் சரியான நடைமுறைப்படுத்துதலை ஏற்படுத்துதல் எவ்வாறு என்று நாம் கற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது என்பது ஏன்?

## வேதாகமத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அக்கறையே இல்லாமல் மக்கள் வேதாகமத்தைப் படிக்கக் கூடும்

வேதாகமத்தை வாசிக்கும் எவரொருவரும், “இது எனக்கு எவ்வாறு நடைமுறைப்படுகிறது?’’ என்று நிலையாகக் கேட்பார் என்பதாக, வேதாகமத்தை விசுவாசிப்பவர்கள் யூகிக்கலாம். இருப்பினும், வேதாகமக் கல்வியாளர்களில் சிலர் (கூட) நடைமுறைப் பயன்பாட்டில் சிறிதளவே ஆர்வம் கொண்டுள்ளார் அல்லது ஆர்வமே கொண்டிருப்பதில்லை என்பதே உண்மையாக உள்ளது. அவர்களை பொறுத்த மட்டில், மற்ற கல்வியாளர்களுக்கு வேதியியல் அல்லது மனோதத்துவம் அல்லது பழங்கால வரலாறு என்பது ஒரு பாடக்களமாக இருப்பது போலவே வேதாகமமும் ஒரு பாடக்களமாக உள்ளது, அவ்வளவே. அவர்கள் தனித்தனிப் புத்தகங்களின் ஆதாரமூலங்களில், அந்த ஆதாரமூலங்களுக்குப் பின்னால் உள்ள வரலாற்றில், வேதாகம எடுத்துரைப்புகளுக்குப் பின்னால் உள்ள வரலாற்றுரீதியான நிகழ்வுகளைப் படிப்படியாக வெளிப்படுத்துவதில் ஆர்வமாக உள்ளனர். இதன் விளைவாக, அவர்கள் “இது எனக்கு எவ்வாறு நடைமுறைப்படுகிறது?” என்ற கேள்வியைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்காமலேயே, வேதாகமத்தைப் படிப்பதில் ஒரு வாழ்நாள் காலத்தையே செலவிடலாம். அவர்களைப் பொறுத்தமட்டில், வேதாகமம் என்பது பாபிலோனியர்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள் மற்றும் ரோமர்கள் ஆகியோரின் பழங்காலக் கட்டுக்கதைகளாகவும் புராணங்களாகவும் உள்ளன என்பதைக் காட்டிலும் அதிகமாக அவர்களின் வாழ்வில் நடைமுறைப்பயன்பாடு எதையும் கொண்டிருப்பதில்லை.

வேதாகமத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதைப் படித்தலானது, உண்மையில் நமக்கு, இன்றைய நாட்களில் பொருத்தமான விஷயம் எதையும் கொண்டிராத பழங்காலப் புராணங்களின் புத்தகம் ஏதொன்றைக் காட்டிலும் வேதாகமம் மேலானதாக உள்ளது என்ற உண்மையை நினைவூட்ட வேண்டும்.

இது நாம், "திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும்" இருக்க வேண்டும் (யாக்கோபு 1:22) என்பதை நினைவில் வைப்பதற்கு நமக்கு உதவ வேண்டும்.

## நவீன வாழ்வில் வேதாகமத்தை நடைமுறைப்படுத்துகிற பலர் நடைமுறைப்படுத்துதல் பயன்பாட்டில் தவறு செய்கின்றனர்

மக்கள் வேதாகமத்தில் மிகச்சிறிய அளவை அல்லது மிக அதிகமான அளவை தங்களுக்கு நடைமுறைப்படுத்துதல் என்ற தவறை ஏற்படுத்தக் கூடும். வாசகர்கள் வேதாகமத்திற்கு, அதன் பொதுவான கொள்கைகள் மாத்திரமே நடைமுறைப்படுத்தக் கூடியவைகளாக உள்ளன என்றோ அல்லது ஒவ்வொரு வசனப்பகுதியும் நேரடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றோ விளக்கம் அளிக்க முடியும்.

### பரந்த பொதுவான கொள்கைகளை மாத்திரமே பலர் நடைமுறைப் படுத்துகின்றனர்

வேதாகமம் இன்றைய நாட்களில் நமக்கு மிகவும் பொதுவாக மாத்திரமே நடைமுறைப்படுகிறது, அதாவது மெய்யாகவே அதன் குறிப்பிட்ட போதனைகளில் எதுவும் இருபத்தியோராம் நூற்றாண்டு உலகத்திற்கு நேரடியாக நடைமுறைப்படக் கூடியவை அல்ல என்பது, செய்யப்படக் கூடிய ஒரு தவறாக உள்ளது. இப்படிப்பட்ட விளக்கம் அளிப்பவர்கள், வேதாகமத்தின் சில உபதேசங்களை - தேவன் ஒருவர் இருக்கிறார், இயேசு ஒரு மாபெரும் மனிதராக இருந்தார் மற்றும் மக்கள் "நல்லவர்களாகவும்" ஒருவர் மற்றவருக்கு உதவுபவர்களாகவும் இருக்க வேண்டும் போன்றவற்றை - ஏற்றுக்கொள்கின்றனர். இருப்பினும் அவர்கள் வேதாகமத்தின் குறிப்பிட்ட போதனைகளைப் புறக்கணிக்கின்றனர். அவர்கள் ஒரு நபரின் தனிப்பட்ட தேவனில், வேதாகமத்தில் விவரிக்கப்பட அற்புதங்களில் அல்லது நித்தியதண்டனை என்ற கருத்தில் விசுவாசம் கொள்ளாது இருக்கலாம்.

வேதவசனம் பற்றி இந்தக் கண்ணோட்டம் கொண்ட மாணவர், தமது வாழ்விற்கு நடைமுறைப் படக்கூடியதாகத் தாம் கருதுகிற வேதாகம சத்தியங்களை மேலெழுந்தவாரியாகத் தேர்ந்து கொள்கிறார் என்பது இந்தக் கண்ணோட்டத்தில் உள்ள பிரச்சனையாக இருக்கிறது. அவர், "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்"[1] என்பதை, ஒருவர் மற்றவர் மீது அன்புகூரும் பொறுப்பு என்ற வகையில், நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு கட்டளையாகக் கண்ணோக்குகிறார். இருப்பினும் அவர், இயேசுவே இரட்சிக்கப்படுவதற்கான ஒரே வழியாக இருக்கிறார் (நடபடிகள் 4:12; யோவான் 14:6), இயேசு தெய்வீகத்துவமானவராக இருக்கிறார் (யோவான் 8:24) மற்றும் தேவன் அன்பின் தேவனாக இருப்பது போலவே கோபத்தின் தேவனாகவும் இருக்கிறார் என்ற உபதேசங்களைப் புறக்கணிக்கிறார். வேதாகமத்தின் ஒரு உபதேசம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கையில் இன்னொரு உபதேசம் புறக்கணிக்கப்பட்டிருப்பது எவ்வாறு? சில உபதேசங்கள் விளக்கவுரையாளருக்குப்

பிரியமானவைகளாக உள்ளன மற்றும் பிற உபதேசங்கள் அவருக்குப் பிரியமானவைகளாக இருப்பதில்லை என்பதே உண்மையான பதிலாக உள்ளது. இவ்வாறு, வேதாகமத்தின் ஒரு உபதேசம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமா இல்லையா என்பதற்கு ஒரு நபர் நிறைவான முடிவு செய்பவர் ஆகிறார்.

குறைந்த பட்சமாகக் கூறுவதென்றால், இப்படிப்பட்ட அணுகுமுறையானது சீர்பொருத்தம் அற்றதாக உள்ளது. தேவன் அன்பாக இருக்கிறார் என்று போதிக்கிற அதே வேதாகமம், அவர் கோபத்தின் தேவனாகவும் இருக்கிறார் என்றும் போதிக்கிறது. நாம் இவற்றில் ஒரு சத்தியத்தை ஏற்றுக்கொண்டு இன்னொரு சத்தியத்தைப் புறக்கணிக்க இயலாது.

### மற்றவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் நேரடியாக நடைமுறைப்படுபவை ஆக்குகின்றனர்

வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் இன்றைய நாட்களின் மக்களுக்கு நேரடியாக நடைமுறைப்படுகின்றன என்று யூகித்தல் என்பது, செய்யப்படக் கூடிய இன்னொரு தவறாக உள்ளது. ஒரு வாசகர் வேதாகமத்தின் எந்தப் பக்கத்தையாவது திறந்து அதில் தமக்கு நேரடியாக நடைமுறைப்படக்கூடிய ஒரு செய்தியைக் காண முடியும் என்பது இந்தக் கண்ணோட்டமாக உள்ளது. யாரேனும் ஒருவர், வேதாகமத்தை அவ்வாறு நடத்தும்போது என்ன நடக்கலாம் என்பதை, முறைப்படி உறுதி செய்யப்படாத கதையொன்றும் விவரிக்கிறது:

> ஒருமுறை ஒரு மனிதர், வேதாகமத்தை மனம்போன போக்கில் திறந்து அந்தப் பக்கத்தின் மீது தமது விரலை வைத்து அது சுட்டிக் காண்பிக்கும் வசனத்தில் இருந்து தமது வாழ்விற்கு ஆலோசனை பெற முயற்சி செய்தார். அவரது முதல் முயற்சி பின்வரும் வசனத்தை விளைவித்தது: "அப்பொழுது, அவன் (யூதாஸ்) … நான்றுகொண்டு செத்தான்." திருப்தியற்றுப்போன அவர், மீண்டும் முயற்சி செய்தார். இந்த முறை அவர், பின்வரும் வசனத்தை வாசித்தார்: "நீயும் போய் அந்தப்படியே செய்." மீண்டும் ஒருமுறை முயற்சி செய்தபோது அவருக்குப் பின்வருமாறு கூறப்பட்டது: "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்."[2]

இப்படிப்பட்ட தீவிரமான ஒரு விளைவானது, நமது வாழ்விற்கு வேதாகமத்தைக் கண்மூடித்தனமாக நடைமுறைப்படுத்துவதன் விளைவாக இராமல், வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் நேரடியாக நமக்கு நடைமுறைப்படுகிறது என்பது நடைமுறைப் பயன்பாட்டில் தவறுகளுக்கு வழிநடத்த வாய்ப்புள்ளது. தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சோதித்தறிய கிதியோன், மயிருள்ள ஒரு தோலைக் களத்தில் போட்டார் (நியாயாதிபதிகள் 6:36-40), ஆனால் நாம் மயிருள்ள ஒரு தோலைக் களத்தில் போட்டால் தேவன் பதில் அளிப்பார் என்ற வாக்குத்தத்தங்களை அவரிடம் இருந்து நாம் பெற்றிருப்பது இல்லை. பேழை ஒன்றைக் கட்டும்படி நோவாவுக்குக் கூறப்பட்டது (ஆதியாகமம் 6:14), மற்றும் ஆபிரகாம் தமது மகனைத் தேவனுக்குப் பலிசெலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார் (ஆதியாகமம் 22:2). இன்றைய நாட்களில் தேவன் எவரொருவரிடமும் ஒரு பேழையைக் கட்டும்படியோ அல்லது ஒரு பிள்ளையைப் பலிசெலுத்தும்படியோ கூறுவதில்லை.

வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் இன்றைய நாட்களில்

நேரடியாக நடைமுறைப்படுகின்றன என்று நம்புகிறவர்கள் சீர்பொருத்தம் அற்றவர்களாக உள்ளனர். அவர்கள் “மயிருள்ள ஒரு தோலைப் போடுவதாக” உரிமை கோரும்போது, அவர்கள் உண்மையிலேயே மயிருள்ள ஒரு தோலைப் பயன்படுத்துவதில்லை, அவர்கள் வேதாகமரீதியான உதாரணத்திற்குச் சமமானது என்று தாங்கள் நினைக்கும் சிலவற்றை மாத்திரமே செய்கின்றனர். இந்த மக்களில் எவரும் ஒரு பேழையைக் கட்ட முயற்சி செய்வதில்லை, அல்லது தங்கள் பிள்ளைகளைப் பலிசெலுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதாக நினைப்பதில்லை. வேதாகமரீதியான கட்டளைகள் அல்லது உதாரணங்கள் தங்களுக்கு எவ்விதமாக நடைமுறைப்படுகிறது என்பதில் அவர்களின் தேர்வானது வழக்கமாக மனம்போன போக்கில் ஆனதாக உள்ளது. கோட்பாட்டின்படி ஒவ்வொரு விஷயமும் நடைமுறைப்படக் கூடியதாக இருக்கையில், வேதாகமத்தின் எந்தப்பகுதிகளுக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பதன் மீதான முடிவு, அவர்களின் உணர்வுகள் அல்லது உள்ளுணர்வின் அடிப்படையில் அமைகிறது. முந்திய விஷயத்தின்படி மனிதர்கள், கீழ்ப்படியப்பட வேண்டிய கட்டளையை அல்லது பின்பற்றப்பட வேண்டிய ஒரு உதாரணத்தை, ஒரு குறிப்பிட்ட வசனப்பகுதி பிரதிபலிக்கிறதா இல்லையா என்பதை, உள்ளுணர்வின்படி முடிவு செய்கின்றனர்.

**தீர்வு: பகுத்தறியக் கூடியவர்கள் ஆக்கும் கொள்கைகளைக் கண்டறிதல்**

இவ்விரு தவறுகளையும் தவிர்ப்பதற்கு நாம், நமது வாழ்வில் நேரடியாக நடைமுறைப்படும் கொள்கைகள் மற்றும் மறைமுகமாக நடைமுறைப்படும் கொள்கைகள் ஆகியவற்றைப் பகுத்து அறியக் கூடியவர்கள் ஆக்கும் வேதாகமரீதியான மற்றும் தர்க்கவியல் கொள்கைகளை நாட வேண்டும். இப்படிப்பட்ட கொள்கைகளை ஆராய்தல் என்பது பிரசங்கவியலின் குறிக்கோளாகவும் இந்தப் பாடங்களின் இலக்காகவும் உள்ளது.

## வேதவசனம் இன்றைய நாட்களில் நமக்கு எவ்வாறு நடைமுறைப்படுகிறது என்பதை அறிதல் சிலவேளைகளில் கடினமானதாக உள்ளது

நடைமுறைப்பயன்பாடு கடினமானதாக உள்ளது என்ற உண்மை தெளிவாக உள்ளது. விஷயம் ஏன் இவ்வாறு உள்ளது? பல்வேறு காரணங்கள் தரப்பட முடியும்.

(1) சிலவேளைகளில், ஒரு வசனப்பகுதி அதன் தோற்றகால வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன என்று அறிவது கடினமாக உள்ளது. இன்றைய நாட்களின் வாசகர்கள், முதல் வாசகர்களிடம் இருந்து, காலம், மொழி, புவியியல், பழக்கவழக்கங்கள் மற்றும் கலாச்சாரங்கள் ஆகியவற்றினால் பிரிக்கப்பட்டுள்ளனர். ஆகையால், ஒரு குறிப்பிட்டவேதவசனப்பகுதியில் ஏவுதல் பெற்ற எழுத்தாளர் தமது வாசகர்களுக்கு என்ன கூறினார் என்பதை மிகச்சரியாக அறிதல் என்பது அறைகூவல் விடுப்பதாக இருக்கலாம்; அப்படி இருந்தால், அந்த வசனப்பகுதியை நவீன காலங்களுக்கு நடைமுறைப்படுத்துதல் எவ்வாறு என்பதை அறிதல் இன்னும் அதிக கடினமானதாக இருக்கும்.

*(2) ஒரு வசனப்பகுதி அதன் தோற்றகால வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நாம் அறிந்திருந்தாலும், அவர்களது சூழ்நிலைகளில் இருந்து நமது சூழ்நிலைகள் குறிப்பிடத்தக்க வழிகளில் அடிக்கடி வேறுபட்டுள்ளன. எனவே ஒரு புதிய கேள்வி எழுகிறது: அவர்களது சூழ்நிலைகள் வேறுபட்டிருந்தால், அவர்களுக்கு ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் கூறியது இன்றைய நாட்களின் சபைக்கோ அல்லது கிறிஸ்தவர்களுக்கோ நேரடியாக நடைமுறைப்படவேண்டும் என்று நாம் நம்ப வேண்டுமா?*

*(3) மற்றும், சில கேள்விகள் முதல் நூற்றாண்டு சபைக்குக் கேட்கப்பட்டவைகளாக இருப்பதே இல்லை. தொழில் நுட்பம் என்பது அப்போது இருந்த கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்டிராத பிரச்சனைக்கு உரிய விஷயங்களை அறிமுகப்படுத்தி உள்ளது.*

*(4) தனிநபர்களும் குழுக்களும் தங்கள் சொந்த முன் அனுமானங்கள் மற்றும் பாரபட்சங்களுடன் வேதவசனப்பகுதிகளை அணுகுகின்றனர். அவர்கள் அடிக்கடி அந்தக் கருத்துக்களின் வெளிச்சத்திலேயே வேதவசனங்களுக்கு விளக்கம் அளிக்கின்றனர். "இது எனக்கு எவ்வாறு நடைமுறைப்படுகிறது?" என்று கேட்க வேதவசனங்களுக்குத் திரும்பும் ஒவ்வொருவரும், தமது சொந்த வரலாறு மற்றும் நம்பிக்கைகளின் அமைவு ஆகியவற்றுடன் படிப்பை அணுகுகிறார்; அந்த நம்பிக்கைகளின்படி அவர் வேதவசனங்களைக் கண்ணோக்கி அவற்றை நடைமுறைப்படுத்த வாய்ப்பு உள்ளது.*

*வேதவசனத்தை நடைமுறைப்படுத்துதல் கடினமாக உள்ளது என்ற உண்மை, அது சாத்தியமற்றது என்று அர்த்தப்படுத்துவதில்லை என்பது உண்மையே. அறிவார்ந்த வழிநடத்துதல்கள், சரியான நடைமுறைப்படுத்துதல் என்ற வழியில் நிற்கும் சிரமங்கள் பலவற்றை நீக்கிப்போட முடியும். இந்தக் கடினமான பணிப்பொறுப்பின் சிரமமானது, இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு வசனப் பகுதியின் நடைமுறைப் பயன்பாட்டைக் கண்டறிதலில் இருந்து நம்மைத் தடைசெய்ய நாம் அனுமதிக்க கூடாது. வேதாகமத்தை நாம் விசுவாசிப்பதால், அதை நமது வாழ்வில் நடைமுறைப்படுத்த நம்மையே நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும்; மற்றும் அதை நாம் நமது மிகச்சிறப்பான திறனுடன் செய்ய வேண்டும்.*

## வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் நமது வழிகாட்டியாக இருப்பதை வேதாகமம் நோக்கமாகக் கொண்டுள்ளது

*இதைப் பவுல் பின்வருமாறு கூறினார்: "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2 தீமோத்தேயு 3:16, 17). ஏவுதலினால் பவுல், வேதவாக்கியங்கள் (வேதாகமம்) ஏவுதல் பெற்றது அல்லது தேவன் சுவாசித்தது - அதாவது தேவனே அதன் ஆதாரமூலமாக இருக்கிறார் - என்று கூறினார். அவரது வசனம் நிறைவானதாக உள்ளது மற்றும் அது நமது ஆவிக்குரிய தேவைகள் யாவற்றையும் சந்திக்கக்*

கூடிய வழிமுறைகளாக உள்ளது. குறிப்பாக மூன்று துறைகளில் வேதாகமம் நமது வழிகாட்டியாக உள்ளது என்று நாம் கூறலாம்.[3]

### இறையியலில் நமது வழிகாட்டி

வேதாகமம், இறையலில் நமது வழிகாட்டியாக உள்ளது. அதாவது, *தேவனைப் பற்றியும் தேவனுக்குரிய விஷயங்கள் பற்றியும், நாம் விசுவாசிக்க வேண்டியது என்ன என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது.* நாம் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு, குறிப்பிட்ட சத்தியங்களை விசுவாசிக்க வேண்டும் (காண்க எபிரெயர் 11:6 மற்றும் யோவான் 8:24). இரட்சிக்கப்படுவதற்கு நாம் விசுவாசிக்க வேண்டியவை மற்றும் செய்ய வேண்டியவை என்ன என்று - மனிதர்கள் ஏற்படுத்திய மார்க்க சட்டங்கள் அல்ல ஆனால் - வேதாகமமே தீர்மானிக்கிறது.

தேவனைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதைத் தீர்மானித்தலானது எப்போதுமே சுலபமாக இருப்பதில்லை. தேவனுடைய தெய்வீகத்தை இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் பகிர்ந்து கொண்டிருக்கையில், அவர் எப்படி “ஒரே” தேவனாக இருக்க முடியும்? (எபேசியர் 4:6). சபைவரலாற்றின் முதல் சில நூற்றாண்டுகள், இப்படிப்பட்ட கேள்விகளுடன் இடர்ப்பாடுற்ற விசுவாசிகள் போராடியது பற்றிய மாபெரும் கருத்துப் போராட்டங்களைப் பதிவுசெய்துள்ளது. இன்றைய நாட்களிலும் கூட சிலவேளைகளில் விசுவாசிகள், இறையியல் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதில் கருத்து வேறுபடுகின்றனர்.[4] வேதாகமத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் கொண்ட மாணவர், “இவ்வசனப்பகுதி (அல்லது முழுமையான வேதாகமம்), நான் விசுவாசிக்க வேண்டியது என்ன என்பதைப் பற்றி எனக்குப் போதிப்பது என்ன?” என்று நிலையாகக் கேட்பார்.

### அன்றாட வாழ்வில் நமது வழிகாட்டி

*தேவனுக்கு முன்பாக நாம் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு வேதாகமம் நமது வழிகாட்டியாக உள்ளது.* “எந்த நற்கிரியையுஞ் செய்ய” நம்மைத் தகுதியுள்ளவர்கள் ஆக்குவதன் மூலம் (2 தீமோத்தேயு 3:16), வேதாகமம் நமக்கு, ஒழுக்கங்கள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றில் தவறற்ற வழிகாட்டுதல் ஒன்று அளிக்கிறது. வேலை, விளையாட்டு, வியாபாரம், சமூகம் மற்றும் இல்லம் ஆகியவற்றில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதைக் கற்றுக்கொள்ள நாம் வேதாகமத்திடம் செல்ல முடியும். நடைமுறைக் கிறிஸ்தவ வாழ்விற்கு வேதாகமம் நமது வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங்கொண்டார்.

ஒழுக்கங்கள், நெறிமுறைகள் மற்றும் கிறிஸ்தவ வாழ்வு ஆகிய துறைகளில், விளக்கம் அளித்தலில் நாம் சில முள்ளான பிரச்சனைகளை எதிர்கொள்கிறோம். அடிமைமுறை நிலவும் ஒரு சமூகத்தில் நாம் வாழ்வதில்லை என்றால், அடிமைகள் மற்றும் எஜமானர்கள் ஆகியோரைப் பற்றி உரைக்கும் வசனப் பகுதிகளை நமது வாழ்வில் எவ்வாறு நாம் நடைமுறைப்படுத்த முடியும்? அரசர் மற்றும் அவரது குடிமக்களுக்கு இடையிலான உறவுமுறைகளை ஆளுமை செய்த முறைமைகளை, ஜனநாயக நாட்டில் வாழ்பவர்கள் தங்களுக்கு எவ்வாறு நடைமுறைப்படுத்தக் கூடும்? இன்றைய நாட்களில் நாம் எதிர்கொள்கிற நெறிமுறை மற்றும் ஒழுக்கம் பற்றிய கேள்விகளில் பல, வேதாகமம் எழுதப்பட்ட

காலங்களில் மனிதகற்பனைக்குள் நுழைந்திராதவையாக இருக்கலாம் என்ற உண்மையானது, ஒருவேளை இன்னும் அதிக இடர்பாடுள்ளதாக இருக்கலாம். இப்போது அறிவியல் அறிஞர்கள் கோட்பாட்டளவில் மனிதர்களைக் குளோன் செய்யும் திறனைக் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட பாடக் கருத்தைப் பற்றிக் கூறுவதற்கு வேதாகமம் எதையாவது கொண்டுள்ளதா?

**மார்க்கரீதியான நடைமுறைகளில் நமது வழிகாட்டி**

ஒரு கிறிஸ்தவர் எதிர்கொள்ளுகிற ஒவ்வொரு விஷயமும் மார்க்கரீதியான விஷயமாகக் கண்ணோக்கப்படலாம் என்றிருக்கையில், குறிப்பாக ஆராதனையுடன் தொடர்புடைய நடைமுறைகளை - ஆராதனையில் தேவனைத் துதிக்கவும் அவருக்குக் கீழ்ப்படியவும் நாம் செய்கிற விஷயங்களை - திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்கு நாம், "மார்க்கரீதியான நடைமுறைகள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறோம். மற்ற மக்களுடன் நமது நடைமுறைகள் மற்றும் உறவுகள் பற்றிய கேள்விகள் "ஒழுக்கரீதியான கேள்விகளாக" உள்ளன. மற்றவர்கள் மீதான நமது அன்பை எப்படி வெளிப்படுத்த வேண்டுமென்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது. தேவனுடனான நமது உறவுமுறை மற்றும் அவர்மீது அன்புகூருதலை நாம் எவ்வாறு செயல்விளக்கப்படுத்துவது என்பவற்றைப் பற்றிய கேள்விகள், "மார்க்கரீதியான கேள்விகளாக" உள்ளன. *தேவனிடத்தில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து வேதாகமம் நமது வழிகாட்டியாக உள்ளது.*

சிலர், மார்க்க விஷயத்தில் நமது வழிகாட்டி என்ற கருத்தில் வேதாகமம் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டுமா என்று சந்தேகப் படுகின்றனர். அவர்களைப் பொறுத்த மட்டில் வேதாகமம், மற்ற மக்களை எவ்வாறு நடத்துவது மற்றும் அன்றாட வாழ்வில் எவ்வாறு நடந்துகொள்வது என்பதைப் பற்றி வேதாகமம் வழிகாட்டுதலை அளிக்கிறது, ஆனால் அது - சபை, ஞானஸ்நானம், கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் பொதுவாக ஆராதனை ஆகியவற்றைப் பற்றிய அதன் உபதேசங்கள் என்ற வகையில் - தூய்மையான மார்க்கநடைமுறைகள் பற்றிக் கூறுவதில் பொருத்தமற்றதாக உள்ளது என்ற எண்ணம் கொண்டுள்ளனர். இருப்பினும் சந்தேகப்படுபவர்கள், சிலவகை சபையைச் சார்ந்திருக்கும்போது, ஞானஸ்நானத்தின் ஒரு வடிவமைப்பை நடைமுறைப்படுத்தும்போது, சில வேளைகளில் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கும்போது மற்றும் ஆராதனையில் ஈடுபடும்போது, இந்த நம்பிக்கையில் சீர்பொருத்தம் அற்றவர்களாக உள்ளனர். அவர்கள், இன்றைய நாட்களில் சபைகள் முதல் நூற்றாண்டு சபையைப் போல் இருப்பதை நாடவேண்டும் என்ற கருத்தைப் புறக்கணித்தாலும், வேதாகமத்தை மார்க்கரீதியான நடைமுறைகளில் ஒரு பொதுவான வழிகாட்டியாக நம்புகின்றனர் என்பதை அவர்களின் நடைமுறைகள் சுட்டிக்காண்பிக்கின்றன.

உண்மையில், கிறிஸ்தவ மார்க்கக் குழு ஒவ்வொன்றுக்கும் மெய்யாகவே அறைகூவல் விடப்பட்டால், அவைகள் வேதாகமத்தின் வசனப்பகுதி களைக் குறிப்பிடுவதன் மூலம், தங்கள் மார்க்கரீதியான நடைமுறைகளைத் தற்காத்துக்கொள்ள நாடும். இவ்வாறு அவர்கள், வேதாகமம் அன்றாட வாழ்வில் நாம் எவ்வாறு வாழ்வது என்பதற்கான ஒரு வழிகாட்டியாக

மாத்திரம் அல்ல, ஆனால் சபையில் தேவனை எவ்வாறு ஆராதிப்பது மற்றும் சேவிப்பது என்பதற்குரிய நமது ஒரே வழிகாட்டியாகவும் உள்ளது என்று ஒப்புக்கொள்கின்றனர்.

தொகுப்புரை

தேவனைப் பற்றி நாம் விசுவாசிப்பது என்ன, தேவனுக்கு முன்பாக நாம் எவ்வாறு வாழவேண்டும் மற்றும் தேவனிடத்தில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பவை குறித்து, வேதாகமம் நமது வழிகாட்டியாக இருப்பதால், இந்த மூன்று துறைகளிலும் அதன் போதனைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய கேள்விகளை நாம் கவனநிறைவுடன் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

## புரிந்துகொள்ளப்படவும் கீழ்ப்படியப்படவுமே வேதாகமம் எழுதப்பட்டது

பலருடைய கண்ணோக்கிற்கு நேரெதிராக, வேதாகமம் தன்னை, புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக மாத்திரமின்றி கீழ்ப்படியப்பட வேண்டியதாகவும் உள்ளதென்ற கருத்தை முன்வைக்கிறது. இந்த கூற்றின் உண்மையை, எண்ணற்ற வசனப்பகுதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன.

பழைய ஏற்பாட்டில் மோசே பின்வரும் வார்த்தைகளைப் பேசினார்: “மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்” (உபாகமம் 29:29). இஸ்ரவேல் மக்கள் “செய்யும்படிக்கு” அல்லது கீழ்ப்படியும்படிக்குத் தேவன் தமது பிரமாணங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் உள்ள இவ்வசனப் பகுதியும் பழைய ஏற்பாடும் இன்றைய நாட்களில் இனியும் மக்களைக் கட்டுவிக்காது என்றிருக்கையில், இது தேவனால் வெளிப்படுத்தப்பட்ட அவரது சித்தம் பற்றிய அவரது எண்ணப்போக்கைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கிறது. கீழ்ப்படியப்பட வேண்டும் என்ற வகையில் தேவன் ஒரு பிரமாணத்தைக் கொடுத்தார் என்றால், புதிய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய வெளிப்படுத்துதல்களும் கீழ்ப்படியப்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும் அல்லவா?

மத்தேயு 7:21ல், தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களே இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்று இயேசு கூறினார். பின்பு 24 முதல் 27 வரையுள்ள வசனப்பகுதியில் அவர் பின்வருமாறு கூறினார்:

> ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை. ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன்

> எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது.

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு ''அவற்றின்படி செயல்படுகிற'' நபர், ஞானமுள்ள மனிதருக்கு ஒப்பிடப்படுகிறார், ஆனால் அவருடைய வார்த்தைகளைக் கேட்டும் அதன்படி செயல்படாத நபர், புத்தியில்லாத மனிதருக்கு ஒப்பிடப்படுகிறார். இயேசு கூறியது என்ன அல்லது வேதாகமம் போதிப்பது என்ன என்பதைக் கேள்விப்பட்டால் மாத்திரம் போதாது; அவர் போதித்ததையும் வசனம் கூறுவதையும் நாம் செய்ய வேண்டும்!

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம், புரிந்துகொள்ளக் கடினமானதாக இருந்தாலும், அதை வாசிப்பவர்களுக்கும் அது கூறுபவற்றைச் செய்பவர்களுக்கும் ஆசீர்வாதத்தைத் தெளிவாக உரைக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 1:3).

யாக்கோபு பின்வருமாறு கூறினார்,

> ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (யாக்கோபு 1:21-25).

''நான் கேள்விப்பட்டிருக்கிறேன், நான் அறிந்திருக்கிறேன் மற்றும் நான் விசுவாசிக்கிறேன், இதுவே தேவன் என்னிடத்தில் கேட்டுக்கொள்வதாக உள்ளது'' என்று கூறுவதில் திருப்தியடைந்திருந்த சிலருக்கு யாக்கோபு இதை எழுதினார் என்பது உறுதி. அவர்களுக்கு ''கேள்விப்படுதல் மற்றும் அறிதல் என்பவை போதுமானவைகளாக இருப்பதில்லை. விசுவாசித்தல் மாத்திரம் போதுமானதாக இருப்பது இல்லை. நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த வேண்டும் என்றால், அவர் போதிப்பவற்றை நீங்கள் செய்ய வேண்டும்'' என்பதே அவரது செய்தியாக இருந்தது.

இந்த வசனங்கள் யாவையும், நாம் வேதாகமத்தைக் கவனமாக வாசிக்க வேண்டும் மற்றும் அது தனது முதல் வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றிருக்கையில், நாம் அதை, இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களுக்குத் தேவன் என்ன கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்ளும் கண்ணோட்டத்துடனும் வாசிக்க வேண்டும் என்று கூறுகின்றன. வேதாகமம் ஏவுதல் பெற்றதாக உள்ளது என்று நாம் விசுவாசித்தால்

மற்றும் அது தன்னைப்பற்றிக் கூறுவதை நாம் ஏற்றுக்கொண்டால், நமக்குத் தேர்வுசெய்யும் விஷயம் எதுவும் இருப்பதில்லை: *நாம் இரட்சிக்கப்படுவதற்கும் தேவனை ஏற்புடைய வகையில் சேவிக்கவும் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதைக் கண்டறிவதற்கு நாம் வேதாகமத்தை வாசிக்க வேண்டும்.*

## முடிவுரை

பின்வரும் ஒரு எச்சரிக்கையுடன் நாம் இந்தப் பாடத்தை முடிக்கிறோம்: *தவறாக நடைமுறைப் படுத்துவதில் அபாயம் உள்ளது. சரியான நடைமுறைப்படுத்துதல் முக்கியமானதாக உள்ளது.* வேதவசனங்களை - நமது இறையியல்ரீதியான நம்பிக்கைகள், நமது *அன்றாட நடத்தைகள் அல்லது நமது மார்க்கரீதியான நடைமுறைகள் ஆகியவற்றைப் பொறுத்து* - நாம் தவறாக நடைமுறைப் படுத்தினால், நாம் பாவம் செய்பவர்களாகவும் நமக்குநாமே தேவனுடைய கோபத்தைத் தருவித்துக் கொள்பவர்களாகவும் இருக்கலாம். இதன் விளைவாக, வேதவசனங்களைச் *சரியாக நடைமுறைப் படுத்துதல்* என்பது ஒரு நல்ல கருத்தாக மாத்திரம் இருப்பதில்லை, ஆனால் அது, நமது "அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கு" வதற்கும் *அவசியமானதாக* உள்ளது (2 பேதுரு 1:10).

---

குறிப்புகள்

[1]மத்தேயு 7:12; பொழிப்புரை செய்யப்பட்டது. [2]மத்தேயு 27:5; லூக்கா 10:37; யோவான் 13:27. இக்கதையின் பல்வேறு பதிப்புகள் கூறப்பட்டுள்ளன. இது John P. Burgess, *Why Scripture Matters: Reading the Bible in a Time of Church Conflict* (Louisville: Westminster John Knox Press, 1998) என்ற புத்தகத்தில் இருந்து தழுவியமைக்கப் பட்டது. [3]இங்கு முன்மொழியப்படும் மும்மடங்குப் பிரிவு மேம்போக்காக ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. உதாரணமாக, மக்களிடத்தில் நமது நடக்கையானது, தேவன் மீது நாம் கொண்டுள்ள அன்பின் குறிப்பாக உள்ளது. இருந்தபோதிலும் தனித்தன்மை வாய்ந்த இந்தப் பிரிவுகள், இன்றைய நாட்களில் வேதாகமத்தை நடைமுறைப்படுத்தும் பல்வேறு வழிகளைப் பகுத்து ஆராய்வதில் உதவிநிறைந்தவைகளாக உள்ளன. வேதாகமத்தில் இருந்து நாம், எதை நாம் விசுவாசிக்க வேண்டும், எவ்வாறு நாம் வாழவேண்டும் மற்றும் நமது மார்க்கரீதியான நடவடிக்கைகளின் தொடர்பாக நாம் என்ன செய்யவேண்டும் என்பவற்றைக் கற்றுக்கொள்ள முடியும். இந்தப் புத்தகத்தில் உள்ள பெரும்பான்மையான பாடங்கள் இந்த மூன்று வகைகளின் மீது கவனம் குவிக்கும். [4]இன்றைய நாட்களில் சில "கிறிஸ்தவ" குழுக்கள், தேவனைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் வேதாகமத்தில் போதிக்கப்பட்டிராத கண்ணோக்குகளைப் பற்றிக்கொண்டுள்ளனர்.